தேன் துளிகள்

கவிமணி, கலாபூஷணம்
மௌலவி எம்.எச்.எம்.புஹாரி (பலாஹி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே.....

இலங்கை வானொலி

முஸ்லிம் சேவையின்

" வரலாற்றில் ஒர் ஏடு "

நிகழ்ச்சியில் ஒலிபரப்பான

வரலாறுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையின் ஒழுங்குகள்

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது தோழர்களை நோக்கி," வீதிகளிலும் கடைத் தெருக்களிலும் அனாவசியமாகக் கூடியிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அப்போது, அங்கிருந்தோர், "இருக்க வேண்டிய தேவையேற்பட்டால் என்ன செய்வது?" என்று கேட்டார்கள். " அவ்வாறு அவசியம் இருக்க வேண்டியேற்பட்டால் பாதையின் ஒழுங்குகளைப் பேணிக் கொள்ளுங்கள்" என்றார்கள் நபியவர்கள். "பாதையின் ஒழுங்குகள் என்ன நாயகமே," என்று தோழர்கள் வினவினர்.

"தடுக்கப்பட்ட வீண் காட்சிகளையும், அந்நிய பெண்களையும் பார்க்காமல் பார்வையைத் தாழ்த்திக்கொள்ளுதல், பாதசாரிகளுக்குத் தீங்கு செய்யாதிருத்தல், அங்கு வருவோர் ஸலாம் கூறினால் பதில் உரைத்தல், நற் செயல்களைச் செய்யுமாறு ஏவி, தீய செயல்களைத் தவிர்க்குமாறு தடுத்தல் ஆகியவை பாதைகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களாகும்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் உபதேசித்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற் செயல்

ஒரு நாள் ஒரு மனிதர் வீதி வழியே போய்க்கொண்டிருந்தார். அவ்வீதியின் ஓரத்தில் நின்ற ஒரு மரத்தின் கிளை வீதிப் பக்கமாக நீண்டு வளர்ந்திருந்தது. அது அவ்வழியால் போவோர் வருவோர்க் கெல்லாம் இடைஞ்சலாக இருந்தது. இதைக் கண்ட அம்மனிதர், அம்மரத்தின் கிளையை உடைத்துவிட்டார். அதனால், சனங்களுக்கு ஏற்பட்டிருந்த சிரமம் நீங்கிவிட்டது. இது நபி (ஸல்) அவர்களுக்குத் தெரியவந்தது. இச் சிறந்த காரியத்தை நபியவர்கள் பெரிதும் மெச்சினார்கள். அக்காரியத்தைச் செய்த மனிதரைப் பாராட்டினார்கள். அதன் மூலம் அவருக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்று நல் வாழ்த்துக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமம்

ஒரு நாள் நபிமணி (ஸல்) அவர்கள் வழமை போன்று அஸர் தொழுகையை நடாத்தினார்கள். அவர்களுக்குப் பின்னால் நின்று தோழர்கள் தொழுதனர். தொழுது முடிந்ததும் நபியவர்கள் எழுந்தார்கள். அங்கிருந்தவர்கள் எழுவதற்கு முன்னரே, அவர்களையல்லாம் தாண்டிக் கொண்டு பள்ளியைவிட்டு விரைவாக வெளியேறினார்கள். இதைக் கண்ட தோழர்கள் அதிர்ச்சியடைந்தனர். "என்ன நடந்தது? ஏன் நபியவர்கள் மிக அவசரமாகப் போகிறார்கள்?" என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டனர். எவருக்கும் விவரம் தெரியவில்லை. நபியவர்கள் திரும்பி வந்தவுடன் தோழர்கள், அவர்களிடம் விளக்கம் கேட்டனர். "எனது வீட்டில் சிறிதளவு தங்கம் இருப்பது தொழுகையின் போது எனக்கு நினைவு வந்தது. அதை வீட்டில் வைத்திருக்க நான் விரும்பவில்லை. உடனே சென்று அதைத் தருமம் செய்துவிட்டுத் திரும்பியுள்ளேன்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு வழங்குதல்

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் ஒருபோதும் தனிமையில் உணவு உட்கொண்டதில்லை. மற்றவர்களையும் தன்னுடன் சேர்த்து அவர்களுக்கும் கொடுத்து உணவுண்பார்கள். ஒரு நாள் உணவுண்ணும் வேளை வந்ததும் தன்னுடன் உணவுண்ண ஒருவரைத் தேடினார்கள். எவரும் தென்படவில்லை. கவலையுடன் வீடு திரும்பினார்கள். வீட்டில் வந்து பார்த்த போது அங்கே ஒருவர் இருந்தார். "நீங்கள் யார்? என்று இப்றாஹீம் நபி கேட்டார்கள். "நான் தான் உயிர் பறிக்கும் மலக்குல் மௌத்" என்று அவர் கூறினார். "ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று இப்றாஹீம் (அலை) கேட்டார்கள். "உங்களை அல்லாஹ் தனது நண்பராகத் தெரிவு செய்துள்ளான். இந்த நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கவே இங்கு வந்தேன்" என்று மலக்குல் மௌத் அவர்கள் கூறினார்கள். "ஏன் என்னை நண்பராக அல்லாஹ் தெரிவு செய்தான் என்பதை எனக்கும் சொல்ல முடியுமா?" என்று இப்றாஹீம் நபி கேட்டார்கள். "ஆம்! சொல்ல முடியும். நீங்கள் பிறருக்கு உணவு கொடுத்து அவர்களை ஆதரிக்கின்றீர்கள். பிறரிடம் நீங்கள் எதையும் கேட்பதில்லை. இதனால் தான் அல்லாஹ் உங்களை நண்பராகத் தேர்ந்தெடுத்தான்" என்று மலக்குல் மௌத் அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பேறு

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். வீட்டு வாசலில் அபூபக்ர் (றழி) அவர்களும், உமர் (றழி) அவர்களும் நின்றிருந்தனர். "ஏன் இங்கே நிற்கிறீர்கள்?" என்று நபியவர்கள் அவ்விருவரிடமும் கேட்டனர். கடுமையான பசியின் காரணமாக வந்திருக்கிறோம். உங்களிடம் ஏதாவது உணவு பெறலாம் எனக் கருதுகிறோம்" என்று அவ்விருவரும் கூறினர். " நானும் பசியின் காரணமாகத்தான் வெளியே வருகிறேன்" என் நபி (ஸல்) அவர்களும் கூறினார்கள்.

அம் மூவரும் அபூ அல்ஹய்தம் (றழி) அவர்களின் வீட்டிற்குச் சென்றனர். அவர் தோட்டத்திற்குச் சென்றிருந்தார். அவர் வரும் வரை அவர்கள் காத்திருந்தனர். சற்று நேரத்தின் பின் அவர் வந்தார். தோட்டத்திலிருந்து கொண்டு வந்த ஈத்தம் பழங்களை அவர்களுக்குக் கொடுத்தார். அத்துடன் நின்று விடாமல் அவர்களுக்கு உணவு சமைத்துக் கொடுக்க முற்பட்டார். ஆடொன்றை அறுக்கத் தயாரானார்.

"பால் கொடுக்கும் ஆட்டை அறுக்க வேண்டாம்" என்று நபியவர்கள் கூறினார்கள்.

அவ்வாறே அவர் ஆட்டை அறுத்து உணவு தயாரித்து அம் மூவருக்கும் கொடுத்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் உணவருந்தினர். "சற்று நேரத்தின் முன்னர் பசியோடிருந்தோம்.

தற்போது நமக்குத் திருப்திகரமான உணவு கிடைத்திருக்கிறது. இந்த சுகம் குறித்தும் நாம் மறுமையில் வினவப்படுவோம் " என்றார்கள் நபிமணி (ஸல்) அவர்கள்.

noolaham.org | aavanaham.org

இணைவைத்தலும், மறைவான ஆசையும்

ஷத்தாத் பின் அவ்ஸ் என்பவர் ஒரு நபித் தோழர். அவர் ஒரு நாள் அழுதுகொண்டிருந்தார். அவரது நண்பர்கள் "ஏன் அழுகின்றீர்கள்?" என்று அவரிடம் கேட்டனர். நபி மணி (ஸல்) அவர்கள் கூறிய ஒரு நபி மொழி தற்போது எனக்கு நினைவு வந்தது. அது என்ன? என்று நண்பர்கள் வினவினர்.

"எனது சமூகத்தாரிடம் இணைவைத்தலும், மறைவான ஆசையும் ஏற்படுவதை நான் பயப்படுகிறேன்" என்று நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே, உங்கள் மறைவின் பின் உங்கள் சமூகத்தினர் இணைவைத்து வணங்குவார்களா?" என்று நான் கேட்டேன். ஆம்! அவர்கள் சூரியனையோ, சந்திரனையோ, கற்களையோ, சிலைகளையோ வணங்கமாட்டார்கள். ஆனால், அவர்கள் தாம் புரியும் கிரியைகளைப் பிறருக்காகப் புரிவார்கள். மற்றவர்களின் பாராட்டுதல்களுக்காகச் செய்வார்கள். இதைத்தான் "இணைவைத்தல்" என்றேன். மறைவான ஆசையென்பது எனது சமூகத்தில் நோன்பு நோற்றிருப்பார்கள்.

அவ் வேளையில் ஏதாவது ஆசை உணர்வு ஏற்பட்டால் தமது நோன்பை விட்டு விட்டு அந்த ஆசையை அனுபவித்து விடுவார்கள். என்று நபியவர்கள் விளக்கினார்கள். இந்த நபி மொழி தற்போது நினைவுக்கு வந்தது. அதுதான் அழுகிறேன் " என்று ஷத்தாத் பின் அவ்ஸ் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை

ஒரு நாள் நபி மணி (ஸல்) அவர்களது முன்னிலையில் அமர்ந்திருந்த ஒரு மனிதர் இடது கையினால் உணவருந்திக் கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்கள் இதைக் கவனித்து விட்டார்கள். அவரை நோக்கி "இடது கையால் உணவருந்தக் கூடாது, வலது கையினால் உண்ணுங்கள்" என்று கூறினார்கள். அவர் அக் கட்டளையை ஏற்றுக்கொள்ளவில்லை. "என்னால் வலது கையால் உணவு உண்ண முடியாது" என்று பெருமையுடன் கூறினார். "உமக்கு முடியாதா? அவ்வாறு முடியாமலே போகட்டும்!" என்று நபியவர்கள் கூறிவிட்டார்கள். உடனே அவரது வலது கை செயலிழந்து போய்விட்டது. அவரது கையை வாய்வரை உயர்த்த முடியாமற் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாயலில் அமைதி காத்தல்

கலீபா உமர் (றழி) அவர்களின் காலம் அது. ஒரு நாள் கலீபா அவர்கள் பள்ளிவாயலில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அங்கேயிருந்த இருவர் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதைக் கண்டு கோபமுற்ற கலீபா அவர்கள் அவ்வருவரையும் தம்மிடம் அழைத்தார்கள்.

"நீங்கள் இருவரும் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்? என்று கலீபா கேட்டார்கள்." "நாங்கள் தாயிப் நகரத்தைச் சேர்ந்தவர்கள்" என்று அவ்விருவரும் பதிலளித்தார்கள். "நீங்கள் இருவரும் நபியின் பள்ளியில் சத்தமிட்டுப் பேசினீர்கள். இது கூடாத செயல். பள்ளிவாயல்களில் அமைதி பேண வேண்டியது அவசியம். சத்தமிட்டுக் கூக்குரலிடுவது, இரைந்து பேசுவது, உலக விடயங்களைக் கதைப்பது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். நீங்கள் வெளியூர் வாசிகளாயிருப்பதால் உங்களை சும்மா விட்டுவிடுகிறேன். உள்ளூர்வாசிகளாக நீங்கள் இருந்திருந்தால் உங்களைக் கடுமையாகத் தண்டித்திருப்பேன்" என்று கலீபா உமர் (றழி) அவர்கள் அவ்விருவரையும் எச்சரித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹறாமான உணவு

ஹஸ்ரத் அபூபக்ர் (றழி) அவர்களுக்கு ஒரு பணியாளர் இருந்தார். அவர் ஒரு நாள் வரிவசூலிப்பதற்காக வெளியே சென்று வந்தார். வரும் பொழுது உணவுப் பொருள் வாங்கிக் கொண்டுவந்தார். அவ்வுணவை அபூ பக்ர் (றழி) அவர்களுக்குக் கொடுத்தார். அதில் சிறிய அளவை அபூ பக்ர் (றழி) அவர்கள் சாப்பிட்டார்கள். " இவ்வுணவு உமக்கு எப்படிக் கிடைத்தது? " என்று தமது பணியாளிடம் அபூ பக்ர் (றழி) அவர்கள் கேட்டார்கள்.

" நான் இஸ்லாத்திற் சேர்வதற்கு முன்னர் சாத்திரம் கூறும் தொழிலைச் செய்து வந்தேன். அப்போது ஒருவருக்கு வைத்தியம் செய்தேன். அவர் தற்போது என்னைச் சந்தித்தார். நான் குறிபார்த்து வைத்தியம் செய்ததற்காக இப்போது எனக்குப் பணம் தந்தார். அப்பணத்துக்கு உணவு வாங்கிவந்தேன். அவ்வுணவைத்தான் உங்களுக்கும் தந்தேன்." என்றார். அவர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (றழி) அவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். குறி, சாத்திரம் பார்ப்பது இஸ்லாத்தில் ஹறாமாக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாகக் கிடைக்கும் பணமும், உணவும் ஹறாமானவை. ஹறாமான உணவு தமது வாய்க்குள் சென்று விட்டதே என்று கவலைப்பட்ட அவர்கள், தமது கை விரல்களை வாய்க்குள் செலுத்தி, அவ்வுணவை வாந்தியெடுத்துவிட்டார்கள்.

உணவின் சிறிய அளவு கூட வயிற்றுக்குள் இருக்காதவாறு மிகவும் சிரமப்பட்டு வாந்தியெடுத்து அதை முழுமையாக வெளியேற்றிவிட்டார்கள்.

noolaham.org | aavanaham.org

தாய்க்கு நன்றி செய்தல்

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "நபியவர்களே, வயது முதிர்ந்த எனது தாயை ஒரு நாள் மிகவும் கடுமையான வெயில் நேரத்தில் இரண்டு மைல் தூரம் எனது தோளில் வைத்து சுமந்து சென்றேன். அந்த வெயிலில் ஒரு துண்டு இறைச்சியைப் போட்டால் உடனே அது வெந்து போய்விடும். அவ்வளவு கடுமையான சூடான காலம் அது. அவ்வாறு செய்தமை காரணமாக எனது தாய்க்கு உரிய முறையில் நன்றிசெலுத்தியவனாக ஆவேனா?" என்று கேட்டார்.

"உமது தாய் உம்மை வயிற்றில் சுமந்திருந்த போது அனுபவித்த ஒரு சிறிய வேதனைக்குக் கூட உமது இந்தச் செயல் ஈடாகமாட்டாது" என்று நபி (ஸல்) அவர்கள் அம்மனிதருக்குக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் அன்பு

நபி ஐயூப் (அலை) அவர்களுக்கு நிறைந்த செல்வமும், பொருளும் இருந்தன. மக்களும் அதிகமாக இருந்தனர். அவர்களுக்கு நோய் ஏற்பட்ட போது அவர்களது இதயத்தையும், நாவையும் தவிர எல்லா உறுப்புக்களும் பாதிக்கப்பட்டன. அவர்களை அனைவரும் வெறுத்து ஒதுக்கிவிட்டனர். அவர்களது மனைவி மாத்திரம் கூடவே இருந்து அவர்களுக்குப் பணி செய்து கொண்டிருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உணவு இல்லாமற் போய்விட்டது. உணவு வாங்குவதற்குப் பணமும் இல்லை. தனது தலை முடியில் அரைவாசிப் பகுதியை சிரைத்து அலங்காரம் செய்யும் பெண்களுக்கு அதை விற்றுப் பணம் பெற்று அதற்கு உணவு வாங்கி கணவரான ஐயூப நபிக்குக் கொடுத்தார். நபியவர்கள் அதை உண்டார்கள். மறு நாள் தனது தலை முடியில் மற்றப்பகுதியையும் சிரைத்து அதை விற்று உணவு வாங்கினார்கள். அதைக் கணவருக்குக் கொடுத்த போது அதை உண்ண மறுத்து விட்டார். இவ்வுணவு எப்படிக் கிடைத்தது? என்று கூறினால் தான் உணவை உண்ண முடியும் என்று கூறிவிட்டார்கள். மனைவி தனது தலையைத் திறந்து காட்டினார்கள். தலை மொட்டையாக இருந்தது.

தனது தலை முடியை விற்றுத்தான் மனைவி தனக்கு உணவு தந்திருக்கிறார் என்பதை அறிந்த நபி ஐயூப் (அலை) அவர்கள் மனைவியின் அன்பு கண்டு மெய் சிலிர்த்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைபணி

நபி மணி (ஸல்) அவர்களும், சில ஸஹாபாக்களும் உரையாடிக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு அருகில் வட்ட சாட்டமான ஓர் இளைஞர் சென்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்த தோழர்கள் "திடகாத்திரமான இந்த இளைஞர் புனித யுத்தத்தில் பங்கு கொண்டால் மிக்க பயனுள்ளதாயிருக்கும்" என்று கூறினர். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், "இந்தத் திடகாத்திரமான இளைஞர் உடல் நோவ உழைத்துக் கண்ணியமாக வாழ்ந்து தனது குடும்பத்தையும் கௌரவமாக நடத்துவாரால் அவர், புனிதப் பணியில் ஈடுபட்டிருப்பவராகவே கருதப்படுவார். புனித யுத்தத்தில் ஈடுபடுவது மட்டும் இறைபணியல்ல ஆகுமான வழியில் உழைத்துக் குடும்பம் நடத்துவதும், மனைவி மக்களுக்கு உணவு, உடை கொடுப்பதும், வயது முதிர்ந்த பெற்றாரைப் பேணிக் காப்பதும் இறை பணியாகும்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பெயர்

ஒரு நாள், நபி மணி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். நபியவர்கள் அம் மனிதரிடம் "உமது பெயர் என்ன?" என்று கேட்டார்கள். "எனது பெயர் ஹஸ்ன்" என்று அவர் சொன்னார். "ஹஸ்ன் என்ற அறபுச் சொல்லின் பொருள் துக்கம் என்பதாகும். இவ்வாறான கருத்துள்ள பெயர்களைச் சூட்டக் கூடாது. உமது பெயரை ஸஹ்ல் - இலேசானது, மென்மையானது என்று மாற்றிக் கொள் " என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"இல்லை: எனது தந்தை எனக்குச் சூட்டிய பெயரை நான் மாற்றமாட்டேன்" என்று அவர் கூறிவிட்டார். நபி மணி (ஸல்) அவர்கள் சொன்னது போல அவர் தனது பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. பிற் காலத்தில் அவர் மிகுந்த துக்கத்துடனும், சஞ்சலத்துடனுமே வாழ்ந்தார்.



noolaham.org | aavanaham.org

மார்க்க பக்தியுள்ள மணமகன்

ஒரு நாள் ஹஸன் (றழி) அவர்களிடத்தில் ஒருவர் வந்து "பெரியவர்களே, எனது மகளுக்கு திருமணம் செய்துவைக்க விரும்புகிறேன். எத்தகைய பண்புள்ள மணமகனை மணமுடித்து வைக்க வேண்டும்?" என்று கேட்டார்.

" எப்போதும் அல்லாஹ்வைப் பயந்து, அவனது கட்டளைகளுக்குப் பணிந்து வாழக்கூடிய தக்வாவுள்ள ஒருவரை உமது மகளுக்கு மணமுடித்துவையும்.

ஏனெனில் அம்மணமகன் உமது மகள் மீது அன்பு காட்டும் போது, அவரைக் கண்ணியமாக நடத்துவார். அவருக்கு உமது மகள் மீது ஏதாவது சந்தர்ப்பத்தில் கோபம் ஏற்பட்டால் அப்பெண்ணை துன்புறுத்தமாட்டார். அவருக்கு அநீதி செய்யமாட்டார். எனவே தக்வா உள்ளவரையே உமது மகளுக்கு மணமுடித்து வையும் " என்று ஹஸன் (றழி) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம் பேசுதல்

மாயிஸ் என்ற பெயருடைய ஒருவர் ஒரு நாள் நபி மணி (ஸல்) அவர்களிடம் வந்தார். "நபியவர்களே, நான் விபச்சாரம் புரிந்து விட்டேன்" என்று சொன்னார். நபியவர்கள் அவரது கூற்றை கவனத்தில் எடுக்கவில்லை. மீண்டும் மீண்டும் அவ்வாறு கூறினார். நாலாவது முறை அவர் அவ்வாறு கூறிய பிறகு, "நீர் சொல்வது உண்மைதானா?" என்று நபியவர்கள் கேட்டார்கள். அவர் "ஆம்" என்றார். அவர் திருமணம் முடித்தவராக இருந்ததால், இஸ்லாமிய சட்டப்படி அவரைக் கல்லெறிந்து கொல்லுமாறு தீர்ப்பளித்தார்கள். அவ்வாறு செய்யப்பட்டது, இதைப் பார்த்துக் கொண்டிருந்த இருவர், "இந்த மனிதர் வலிந்து போய் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு நாய் செத்தது போல செத்துப்போனாரே" என்று பேசிக்கொண்டனர். இப் பேச்சு நபியவர்களுக்கு கேட்டு விட்டது. நபியவர்கள் அவ்விருவரையும் அழைத்து, அருகில் செத்துக் கிடந்த ஒரு கழுதையின் மாமிசத்தைச் சாப்பிடுமாறு பணித்தார்கள். "நபியவர்களே, செத்த மிருகத்தின் மாமிசத்தைச் சாப்பிடலாமா?" என்று வெறுப்புடன் கேட்டனர். அவ்விருவரும், "சற்று நேரத்துக்கு முன் இதை விட மோசமானதைச் சாப்பிட்டு விட்டீர்களே. கல்லெறிந்து கொல்லப்பட்ட மனிதரைப் பற்றி நீங்கள் புறம் பேசியதன் மூலம் அவரது மாமிசத்தையல்லவா புசித்துவிட்டீர்கள். நீங்கள் படுபாவிகளாகி விட்டீர்கள். அவரோ சுவனத்து ஆறுகளில் மகிழ்கிறார்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயன்பு

ஒரு நாள் ஒரு பெண் மணி தனது இரு பெண் குழந்தைகளுடன் ஆயிஷா (றழி) அவர்களிடம் வந்தார். அவர் மிகவும் வறுமைப் பட்ட ஒருவர். தனக்கு ஏதாவது கொடுத்து உதவுமாறு அப் பெண், ஆயிஷா நாயகியிடம் கேட்டார். அவ் வேளையில் ஆயிஷா நாயகியிடம் எதுவும் இருக்கவில்லை. மூன்று பேரீத்தம் சுளைகள் மாத்திரம் அவர்களிடம் இருந்தன. அம் மூன்றையும் அப் பெண்ணிடம் கொடுத்தார்கள். அவற்றில் இரண்டை அவ்விரு குழந்தைகளுக்கும் அப் பெண் கொடுத்தாள். அவைகள் அவற்றை உண்டன. மிஞ்சியிருந்த ஒரு சுளையை அப்பெண் தான் உண்பதற்கு ஆயத்தமானார். அப் பிள்ளைகள் மீண்டும் பழத்தைக் கேட்டன. பசியால் வருந்திய அப் பெண் அப் பழத்தை உண்பதற்குத் தனது வாய்க்கு நெருக்கமாகக் கொண்டு சென்ற வேளையில் தான் பிள்ளைகள் மீண்டும் கேட்டனர். அச் சுளையை இரண்டாகப் பிய்த்தெடுத்த அப் பெண் அவற்றை இரு பிள்ளைகளுக்கும் கொடுத்தார்.

அவள் எதுவும் உண்ணவில்லை. இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஆயிஷா நாயகி அவர்கள் இச்சம்பவத்தை நபி (ஸல்) அவர்களுக்கு தெரிவித்தார்கள். "அப் பெண்ணுக்கு அல்லாஹ் சுவனத்தை அளிப்பான் அப் பெண் நரகை விட்டும் பாதுகாப்பு பெறுவார்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாயல் பணி

நபி மணி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த ஒரு கறுப்பு நிறப் பெண், பள்ளிவாயலைக் கூட்டித் துப்புரவு செய்யும் பணியில் நீண்ட காலமாக ஈடுபட்டிருந்தாள். ஒரு நாள் அவள் அப் பணியைச் செய்ய அங்கு வரவில்லை. இதை அவதானித்த நபி மணி (ஸல்) அவர்கள்," அப் பெண்ணைப் பற்றி விசாரித்தார்கள். அவள், திடீரென்று மரணித்து விட்டதாகத் தகவல் கிடைத்தது. நபி மணி (ஸல்) அவர்கள் கவலைப்பட்டார்கள். அப் பெண் மரணித்தது பற்றி எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை? " என்று ஸஹாபாக்களிடம் கேட்டார்கள். பின்னர் அப் பெண் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்குச் சென்று ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றி அப் பெண்ணுக்காக துஆச் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க மோதிரம்

நபி மணி (ஸல்) அவர்கள் ஒரு முறை தமது தோழர்களுக்குப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, அங்கு ஒருவர் வந்தார். அவரது கை விரலில் தங்க மோதிரம் அணிந்திருப்பதை நபியவர்கள் கண்டார்கள். "ஆண்கள் தங்க மோதிரம் அணிவது கூடாது, அவ்வாறு அணிந்தால் அவர் மறுமையில் நரக நெருப்பினால் மோதிரம் அணுவிக்கப்படுவார்" என்று நபியவர்கள் எச்சரித்தார்கள். அம் மனிதர் தனது மோதிரத்தை உடனே கழற்றிக் கீழே வைத்துவிட்டார். நபியவர்களின் உபதேசம் முடிவுற்று சபை கலைந்த போது அம் மனிதர் அங்கிருந்து எழுந்தார். அம் மோதிரத்தை எடுக்காமல் அங்கேயே வைத்துவிட்டுச் செல்வதற்கு ஆயத்தப்பட்டார். "ஆண்கள் தான் இதை அணியக் கூடாது. பெண்கள் அணியலாம். உங்கள் மனைவிக்கோ, பெண்களுக்கோ இதைக் கொடுப்பதற்கு எடுத்துச் செல்லுங்கள்" என்று நண்பர்கள், அவருக்குக் கூறினர். அவர் மறுத்து விட்டார். ஆண்கள் தங்கம் அணிவது கூடாது - ஹறாம் என்பது எனக்கு முன்பு தெரியாது. இப்போது நபியவர்கள் கூறிய போதுதான் அது பற்றி எனக்குத் தெரியும். நபியவர்கள் ஆகாது என்று கூறியபின் மோதிரத்தை எனது கையால் தொட்டுக் கூடப் பார்க்கமாட்டேன்" என்று உறுதியாகக் கூறிக் கொண்டு அவர் எழுந்து சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் அடைத்தல்

பனூ இஸ்ராயீல்கள் காலத்து மனிதர் அவர். அவரிடத்தில் மற்றொருவர் 1000 தங்கக் காசுகள் கடன் கேட்டார். அதனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பித் தருவதாகவும் அவர் கூறினார். " உமக்குக் கடன் தருவதாயின் அதற்கு ஒரு பிணையாளியை நீர் நியமிக்க வேண்டும் " என்று அம் மனிதர் சொன்னார். " எனக்குப் பிணை நிற்க ஒருவருமில்லை. அல்லாஹ்தான் பிணையாளி " என்றார் கடன் கேட்டவர். இதனைக் கேட்டதும் அம் மனிதர் கடன் கொடுக்க இணங்கினார்.

கடனைப் பெற்றுக் கொண்டவர் தனது ஊருக்குப் போனார். கடனைத் திருப்பி ஒப்படைக்கும் காலம் வந்தது. கடல் வழியாகப் பயணம் செய்வோரிடம் அப் பணத்தைத் திருப்பி அனுப்பக் கடற்கரைக்குப் போனார். அன்று, கடற் பயணிகள் எவரையும் காணவில்லை. ஒரு மரக்கட்டையை எடுத்து அதை பிளந்து அதற்குள் பணத்தை வைத்துச் சரிசெய்து அதைக் கடலில் போட்டு விட்டுத் திரும்பிவிட்டார்.

கடனைக் கொடுத்தவர் மறு கரையில் கடன் பெற்றவர் வருகின்றாரா என்று காத்திருந்தார். எவரும் வரவில்லை. ஒரு மரக்கட்டை மிதந்து வந்தது. அம் மனிதர் அதை எடுத்து விறகுக்காக வீட்டுக்குக் கொண்டு சென்றார்.

அதைப் பிளந்தார். அதற்குள் 1000 தங்கக் காசுகளும் கடன் பெற்றவரின் கடிதமும் இருந்தன. அவர் மகிழ்ச்சியடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனாளியை மன்னித்தல்

அபூ கதாதஹ் (றழி) அவர்களிடம் ஒருவர் கடன் வாங்கியிருந்தார். அவர்கள் அம் மனிதரிடமிருந்து தனது கடனை அறவிட்டுக் கொள்வதற்காக அம் மனிதரின் வீட்டுக் போனார். அம் மனிதர் வீட்டினுள்ளே ஒழிந்து இருந்து கொண்டு இல்லை யென்று அறிவிக்குமாறு மனைவியிடம் கூறினார். அவர்களுக்கு அவ்வாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அம் மனிதரின் சிறிய மகன் அங்கு நிற்பதை கதாதஹ் (றழி) அவர்கள் கண்டுவிட்டார்கள். அச் சிறுவரிடம், "உமது தந்தை எங்கே?" என்று கேட்டார்கள். "தந்தை வீட்டினுள்ளே உணவருந்திக் கொண்டிருக்கிறார்" என்று மகன் கூறினான். உடனே கதாதஹ் (றழி) அவர்கள் வீட்டினுள்ளிருந்த மனிதரை வெளியே வரச் சொன்னார்கள். "நீ ஏன் வீட்டினுள் ஒழிந்து கொண்டிருந்தாய்? என்று கேட்டார்கள். "நான் ஏழையாக இருக்கிறேன். உங்களது கடனை அடைப்பதற்கு என்னிடம் எவ்வித வசதியும் இல்லாதிருக்கிறது" என்று அம் மனிதர் கூறினார். இதைக் கேட்ட கதாதஹ் (றழி) அவர்கள் அழுதுவிட்டார்கள்.

"ஒருவர் கடன் கொடுத்து அக் கடனைப் பெற்றவர் அதைத் திருப்பித்தர வசதியற்ற நிலைக்கு ஆளானால் அக் கடனைத் திருப்பிப் பெறாமல் மன்னித்து விட்டுவிட்டால், அவர் மறுமையில் அர்ஷின் நிழலில் சுகம் பெறுவார் " என்ற ஹதீஸை நினைத்துப் பார்த்த கதாதஹ் (றழி) அவர்கள் அம் மனிதரிடமிருந்து கடனைத் திருப்பிப் பெறாமல் விட்டுவிட்டார்கள்.

noolaham.org | aavanaham.org

அபூபக்ர் (றழி) அவர்களின் தரும்ம்

நபி (ஸல்) அவர்கள், இஸ்லாமியப் புனிதப் பணிக்காகத் தமது பொருளுதவிகளை வழங்குமாறு ஸஹாபாக்களுக்கு அறிவித்தார்கள். அப்போது உமர் (றழி) அவர்கள் பொருட்களை கொண்டு வந்து நபியவர்களிடம் ஒப்படைத்தார்கள். "உமரே, உங்களது தேவைக்கு எதனை வைத்துள்ளீர்கள்?" என்று நபியவர்கள் கேட்டார்கள். "எனது தேவைக்கு அரைவாசியை வைத்துக்கொண்டு மற்ற அரைவாசியைத் தங்களிடம் ஒப்படைத்துள்ளேன் " என்று உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

சற்றுத் தாமதித்து " அபூ பக்ர் (றழி) அவர்கள் தமது பொருட்களை கொண்டுவந்து நபியவர்களிடம் கொடுத்தார்கள். அபூ பக்ரே, உங்கள் தேவைக்கு எதனை வைத்துள்ளீர்கள்?" என்று நபியவர்கள் கேட்டார்கள்."எனது தேவைக்கு எதனையும் வைத்துக் கொள்ளவில்லை.

அனைத்தயும் உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன்" என்றார்கள் அபூ பக்ர் (றழி) அவர்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த உமர் (றழி) அவர்கள் அழத் தொடங்கிவிட்டார்கள். " அபூ பக்ரே, நற்காரியங்களிலும், நற்பணிகளுக்காக உதவுவதிலும் உங்களை யாராலும் வெல்ல முடியாது என்று உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

noolaham.org | aavanaham.org

இலாபம்

ஸுஹைப் என்னும் பெயருடைய மக்காவாசி யொருவர், மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லப் புறப்பட்டார். அவரை வழிமறித்துக் கொண்ட குறைஷிகள், " நீர் மக்காவுக்கு வரும்போது எவ்விதப் பொருளுமின்றி வெறுமனே வந்தீர். ஆனால், தற்போது, பொருள் பண்டங்களுடன் மக்காவிலிருந்து செல்லப்போகின்றீரே? " என்று கேவலத்துடன் கேட்டனர். " எனது பொருட்களையெல்லாம் உங்களிடம் நான் ஒப்படைத்துவிட்டால் என்னை இங்கிருந்து செல்ல அனுமதிப்பீர்களா? " என்று கேட்டார். அதற்கு அவர்கள் சம்மதித்தனர். எனவே ஸுஹைப் (றழி) அவர்கள் தமது உடைமைகள் அனைத்தையும் மக்காவிலேயே விட்டுவிட்டு வெறுங்கையோடு மதீனாவுக்குச் சென்றார்கள். இதையறிந்த நபி மணி (ஸல்) அவர்கள், "ஸுஹைப் இலாபமடைந்து விட்டார், ஸுஹைப் இலாபமடைந்து விட்டார் என்று கூறி அவரை வாழ்த்தினார்கள்.

noolaham.org | aavanaham.org

மறுமை நாளில் எல்லோரும் எழுப்பப்பட்ட பின்னர் " விசாரணைகள் எவையுமின்றி சுவர்க்கம் நுழையக்கூடியவர்கள் எங்கே?" என்று வினவப்படும். அப்போது ஒரு கூட்டத்தினர் அங்கு எழுந்து வருவார்கள். அப்போது அவர்களை மலக்குகள் நோக்கி, "நீங்கள் எங்கே போகின்றீர்கள்?" என்று கேட்பார்கள். "நாங்கள் சுவர்க்கத்துக்குப் போகிறோம்" என்று அவர்கள் பதிலளிப்பர். "விசாரணைகள் செய்யப்படாமலா சுவர்க்கம் நுழையப் போகின்றீர்கள்?" என்று அவர்கள் கேட்பார்கள். "ஆம்" என்று பதலளிப்பார்கள். "நீங்கள் யார்? எப்படி உங்களுக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது?" என்று மலக்குகள் வினவுவர்."நாங்கள் பொறுமையாளர்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றும் பட்சத்தில் எமக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், சிரமங்களையும் நாங்கள் சகித்துக் கொண்டோம் பாவகாரியங்களை விடுவதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களையும் பொறுத்துக் கொண்டோம்" என்று அவர்கள் கூறுவர். "அப்படியா? நீங்கள் இப்போதே சுவர்க்கத்தில் நுழையுங்கள். அங்கிருக்கும் சுகங்களை நன்கு அனுபவியுங்கள" என்று மலக்குகள் வாழ்த்துக் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு

நபி மூஸா (அலை) அவர்கள் ஒரு முறை அல்லாஹ்விடம் கேட்டார்கள்:

" இறைவா! எதன் காரணத்தால் என்னை நீ நபியாகத் தேர்ந்தெடுத்தாய்? " என்று

" எனது படைப்பினங்களின் மீது நீங்கள் அன்பு காட்டுவபராக இருந்தீர்கள், ஒரு முறை நீங்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தீர்கள். அந்த மந்தைகளில் ஒன்று காணாமற் போய்விட்டது. அதைத் தேடி நீண்ட தூரம் நடந்து சென்றீர்கள். அது ஓர் இடத்தில் மிகவும் களைத்துப் போய் படுத்திருந்தது. அதற்கு உணவு கொடுத்து அதை உங்கள் தோளில் வைத்து சுமந்து வந்து அதன் மீது மிகவும் அன்பு காட்டினீர்கள். இப் பணியில் நீங்கள் மிகவும் சிரமப்பட்டீர்கள் இவ்வாறு ஒரு பிராணியின் மீது நீங்கள் இரக்கம் காட்டியதாலேயே உங்களை நான் நபியாக தேர்ந்தெடுத்தேன்" என்று அல்லாஹ்த்தஆலா மூஸா (அலை) அவர்களுக்கு அறிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீபாவின் பணிவு

உமர் (றழி) அவர்கள் கலீபாவாக இருக்கும் காலம் அது. ஒரு முறை அவர்கள் சிரியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டார்கள். அவர்களும், அவர்களது பணியாளரும் ஒட்டகத்தில் பிரயாணம் செய்தார்கள். சிறிது தூரத்துக்கு உமர் (றழி) அவர்கள் ஒட்டகத்தில் ஏறியிருக்க, பணியாள் அதன் கயிற்றைப் பிடித்து நடந்து செல்வதும், இன்னும் சிறிது நேரத்துக்கு பணியாள் ஒட்டகத்தில் பயணிக்க கலீபா அதன் கயிற்றைப் பிடித்து நடந்து செல்வதுமாக இருவரும் சென்றனர். சிரியா நகரத்தினுள் நுழையும் சந்தர்ப்பத்தில் பணியாள் ஒட்டகத்தில் ஏறியும், கலீபா அதன் கயிற்றைப் பிடித்தவாறு நடந்தும் செல்லும் முறை வந்தது. அதன் படி பணியாளை ஒட்டகத்தில் ஏற்றிவைத்து கலீபா அவர்கள் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தவாறு நடந்து சென்றார்கள். வழியில் தண்ணீர் தேங்கி நின்றது.

கலீபா அவர்கள் தமது காலணியைக் களற்றி கமுக்கட்டில் வைத்துக் கொண்டு நீரில் நடந்து ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தவாறு நகரத்தை அண்மித்தார்கள். சிரியாவின் ஆளுநராக இருந்த அபூ உபைதா இப்னு ஜற்றாஹ் (றழி) அவர்கள் கலீபாவை வரவேற்க வந்து, " உங்களை வரவேற்க நகரின் தலைவர்கெளெல்லாம் எதிர் பார்த்து நிற்கிறார்கள். நீங்கள் இந்தக் கோலத்தில் வரலாமா? " என்று கேட்டார்கள். " அல்லாஹ் நம்மைப் புனித இஸ்லாத்தின் மூலம் கண்ணியப்படுத்தியிருக்கிறான். சனங்கள் எதைச் சொன்னாலும் நமக்குப் பாதகமில்லை" என்று கலீபா அவர்கள் மிக அடக்கத்துடன் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை

கலீபா உமர் (றழி) அவர்கள் ஒரு முறை தமது நண்பர்களுடன் ஹஜ்ஜுக் கடமைக்குச் சென்றார்கள். அவர்களுடன் ஜிபில்லது ப்னு அய்ஹும் என்பவரும் சென்றார். அவர்கள் அனைவரும் க.்பதுல்லாஹ்வை "தவாப்" செய்து கொண்டிருந்தார்கள். அவ் வேளையில் ஜிபில்லது பினு அல் அய்ஹும் என்ற செல்வாக்கும், செல்வமுமுள்ள நபித் தோழரின் போர்வையில் ஒரு சாதாரண மனிதர் மிதித்துவிட்டார். இதனால் ஆத்திரமுற்ற ஜிபில்லது அவரது கன்னத்தில் அறைந்து விட்டார். இது பற்றி அம் மனிதர் கலீபா உமர் (றழி) அவர்களிடம் முறையிட்டார். தவாபு செய்து முடிந்ததும் கலீபா அவர்கள் ஜிபில்லதுவை அழைத்தார்கள். அம் மனிதருக்கு அறைந்ததைப் பற்றி விசாரித்தார்கள். "ஆம்! அவர் எனது போர்வையில் மிதித்துவிட்டார். அது புனித இடம் என்பதால் அறைந்ததுடன் மட்டும் நிறுத்திக் கொண்டேன் வேறு இடமாக இருந்திருந்தால் அவரை வாளால் வெட்டியிருப்பேன்" என்று ஜிபில்லத்து ஆத்திரத்துடன் கூறினார்.

கலீபா அவர்கள் இது குறித்துக் கடுங் கோபப்பட்டார்கள். "ஜிபில்லாவே, அந்த மனிதரின் உரிமைகளை மதிப்பது உமது கடமை நீர் தவறிழைத்து விட்டீர். இது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம் " என்று அவரைக் கடிந்துகொண்டார்கள்.

" நீர் செல்வந்தராகவும், அவர் சாதாரண ஏழையாகவும் இருக்கலாம். இஸ்லாத்தில் எல்லோரும் சமம்தான். ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இஸ்லாத்தில் இல்லை" என்றும் அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை

ஒரு நாள் ஆபூ பக்ர் (றழி) அவர்கள் நபி மணி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அப்போது அங்கிருந்த ஒரு மனிதர் அபூ பக்ர் (றழி) அவர்களை கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தார். நபியவர்களும் அபூ பக்ர் (றழி) அவர்களும் அங்கு அமைதியாக அமர்ந்திருந்தார்கள். கண்டிக்கும் மனிதரை அவர்கள் கண்டிக்கவில்லை. அம் மனிதர் பேச்சை நிறுத்தியபோது, ஆபூ பக்ர் (றழி) அவர்கள் அம் மனிதரை தாக்கிப் பேசினார்கள். அவ்வளவு நேரமும் அங்கு அமைதியாதக அமர்ந்திருந்த நபி மணி (ஸல்) அவர்கள், அங்கு இருக்காமல் உடனே எழுந்து சென்று விட்டார்கள். உடனே, ஆபூ பக்ர் (றழி) அவர்கள், நபி மணி (ஸல்) அவர்களைத் தொடர்ந்து சென்று “ஏன்? திடீரென்று எழுந்து வந்து விட்டீர்கள்? ” என்று கேட்டார்கள்.

“அம் மனிதர் உங்களைக் கண்டித்துக் கொண்டிருக்கும் போது நீங்கள் பொறுமையுடன் அமர்ந்திருந்தீர்கள். அதனால் அங்கே ஒரு மலக்கு அமர்ந்திருந்து அவரது கண்டனங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

நீங்கள் அம் மனிதரை எதிர்த்துப் பேச முற்பட்டபோது அங்கிருந்த மலக்கு எழுந்து சென்று விட்டார். அவ் விடத்தில் ஷைத்தான் வந்து அமர்ந்து கொண்டான். ஷைத்தான் இருக்கும் இடத்தில் நான் இருப்பதில்லை, உடனே எழுந்து விட்டேன் ” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹறாமான உணவு

ஒரு நாள் ஸ.்து பினு அபீ வக்காஸ் (றழி) அவர்கள் மிகுந்த கவலையுடன் நபி மணி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவர்களை, நபியவர்கள் கண்டதும் "நண்பரே, என்ன? மிகுந்த கவலையுடன் காணப்படுகின்றீர்கள்" என்று கேட்டார்கள்.

"நபியவர்களே, நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகிறேன். எனது பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதுதான் எனக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது" என்று அவர் பதிலளித்தார்.

"அப்படியா? உணவு விடயத்தில் பேணுதலாக நடந்து கொள்ளுங்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் விலக்கப்பட்ட - ஹறாமான உணவுகளை உட்கொள்ள வேண்டாம்! ஹறாமான முறையில் பெறப்பட்ட ஒரு பிடி உணவானது ஒருவரின் வயிற்றினுள் புகுமானால் அவரது நாற்பது நாளைய பிரார்த்தனைகள் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா" என்று நபி மணி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் நண்பர்

நபி இப்றாஹீம் (அலை) அவர்களை அல்லாஹ் தனது நண்பராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அதனால் அவர்களுக்கு "கலீலுல்லாஹ்- அல்லாஹ்வின் நண்பர்" என்ற சிறப்புப் பெயர் உண்டு. "என்ன காரணத்தால் உங்களை அல்லாஹ் தனது நண்பராகத் தெரிவுசெய்தான்?" என்று அவர்களிடத்தில் சிலர் கேட்டனர்.

"மூன்று அம்சங்கள் என்னிடத்தில் இருந்தன. அதனால் என்னை அவன் தனது நண்பராகத் தேர்ந்தெடுத்தான். ஒன்று: ஒரே நேரத்தில் இரண்டு விவகாரங்கள் எனக்கு சம்பவித்தால், அல்லாஹ்வுக்கு விருப்பமான விவகாரம் எதுவோ அதனையே நான் செய்வேன். இரண்டு: எனது உணவு விடயத்தை அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டதால், அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. மூன்று: நான் ஒரு வேளையாவது என்னுடன் ஒரு விருந்தாளியை சேர்க்காமல் உணவுண்பதில்லை. இந்த மூன்று பண்புகளும் என்னிடத்தில் இருந்ததாலையே என்னை அல்லாஹ் தனது நண்பராகத் தெரிவுசெய்து கொண்டான்" என்று நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் பதலளித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையச்சம்

நபி மணி (ஸல்) அவர்களது காலத்தில் ஹன்லலஹ் என்ற பெயருடைய ஒரு தோழர் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் நபியவர்களது சபையில் அமர்ந்திருந்தார். நபியவர்கள் அன்று மிக உருக்கமான ஓர் உபதேசம் செய்தார்கள். அதைக் கேட்டு அங்கிருந்தோரின் உள்ளங்கெளெல்லாம் உருகின. அனைவரும் அழுதனர். அங்கிருந்த ஹன்லலஹ், நபியவர்களின் பிரசங்கம் முடிந்ததும் தனது வீட்டுக்குச் சென்றார். மனைவி மக்களுடன் அன்பாகப் பழகினார். நபிமணியின் சபையில் இருக்கும்போது அவருக்கிருந்த பக்தி நிலை அப்போது இருக்கவில்லை.

இது குறித்து அவர் மிகவும் கவலைப்பட்டார். "ஹன்லலஹ் நயவஞ்சகராகி விட்டார்" என்று உரத்துக் கூறிக் கொண்டு அவர், நபியவர்களிடம் வந்தார். "ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்?" என்று நபியவர்கள் கேட்டார்கள்.

"நபியே உங்கள் மத்தியில் இருக்கும்போது எங்களுக்குப் பயபக்தியும், இறையச்சமும் ஏற்படுகின்றன. எங்கள் வீட்டுக்குப் போனால் அந்தப் பக்தி நிலை இல்லாமற் போய்விட்டது. அதனால்தான் ஹன்லலஹ் நயவஞ்சகராகிவிட்டார் "என்று நான் கூறினேன்" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"உண்மைதான், எனது மத்தியில் இருக்கும்போது உங்களுக்கு ஏற்படும் பயபக்தி எல்லா நிலைகளிலும் உங்களுக்கு ஏற்படுமானால், உங்களுடன் மலக்குகள் முஸாபஹாச் செய்வார்கள். உங்களின் சகல நிலைகளிலும் உங்களுடன் அவர்கள் இருப்பார்கள்" என்று நபி மணி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.



noolaham.org | aavanaham.org

கைத் தொழில்

நபி தாவூத் (அலை) அவர்கள் நபியாகவும், அரசராகவும் இருந்தார்கள். ஒரு நாள் அவர்கள், தமது நடத்தை பற்றித் தமது மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினார்கள். அதற்காகத் தான் யார் என்பதை மற்றவர்களுக்கும் காட்டிக்கொள்ளாதவாறு சாதாரண ஒருவர் போன்று உடையணிந்து கொண்டு புறப்பட்டார்கள். அங்கே ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒரு மனிதரின் உருவில் வந்தார்கள். அவரிடம் தாவூத் நபியவர்கள், "நண்பரே, தாவூதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்கள்." அவர் நல்லவர்தான். ஆனால் அவரிடம் ஒரு விடயம் இருக்கிறது. அது அவ்வளவு உகந்தது அல்ல என்று அவர் சொன்னார். "அது என்ன?" என்று நபி தாவூத் அவர்கள் கேட்டார்கள். "அவர் அரசராக இருப்பதால் பொது நிதியில் இருந்து கிடைக்கும் பணத்தை கொண்டுதான் தனது வாழ்க்கையை நடத்துகிறார்.

உழைத்து உண்கிறாரில்லை. அதுதான் அவரிடம் இருக்கும் முறையற்ற செயல்" என்று மனித உருவில் வந்த ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.

உடனே தாவூத் (அலை) அவர்கள் மிகுந்த கவலையடைந்து தனக்கு ஒரு கைத் தொழிலைக் கற்றுத் தருமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். இரும்பை உருக்கி கவச உடை செய்யும் தொழிலை அல்லாஹ் அவருக்கு கற்றுக் கொடுத்தான். அதன் பின் கைத் தொழிலைச் செய்தே அவர்கள் வாழ்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் பெண் கலப்பு

ஒரு நாள் நபி மணி (ஸல்) அவர்கள் தமது மனைவியரான உம்மு ஸல்மா, மைமூனா ஆகியோருடன் தமது வீட்டில் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது நபி அவர்களை சந்திக்க இரு கண்களும் தெரியாத அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (றழி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் வருவதைக்கண்ட நபி மணி அவர்கள்தம்முடன் உரையாடிக் கொண்டிருந்த மனைவியர் இருவரையும் அங்கிருந்து எழுந்து உள்ளே செல்லுமாறு பணித்தார்கள். "நபி, அவர்களே அவர் இரு கண்களும் பார்வை இழந்தவராக இருக்கிறாரே, அவர் எங்களை பார்க்க முடியாதே!" என்று கேட்டனர். "அவர் தான் பார்வை அற்றவராக இருக்கிறார், நீங்களுமா அப்படி இருக்கிறீர்கள்?

அவர் உங்களைப் பார்க்காவிட்டாலும் நீங்கள் அவரைப் பார்ப்பீர்களே, எனவே, மறைந்து கொள்ளுங்கள். அவர் சென்ற பின் வாருங்கள். ஏனெனில், அந்நிய ஆணை அந்நிய பெண் பார்ப்பதும், அந்நிய பெண்ணை அந்நிய ஆண் பார்ப்பதும் இஸ்லாத்தில் கடுமையாக தடை செய்யப்பட்டுள்ளன." என்று நபி மணி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

கோள் செல்லுதல்

பனு இஸ்ராயீல்கள் காலத்தில் ஒரு முறை பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்களெல்லாம் மிகவும் கஷ்டப் பட்டார்கள் அப்போது மூஸா (அலை) அவர்கள் தமது மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து மழை வேண்டி பிராத்தித்தார்கள் மழை பெய்யவில்லை: பஞ்சம் நீங்க வில்லை. இவ்வாறு மூன்று தடவைகள் எல்லோரையும் சேர்த்து பிராத்திதிதார்கள். முன்று தடவையும் மழை பொழியவில்லை. "இறைவா, நானும், எனது மக்களும் சேர்ந்து உன்னிடம் முன்று தடவை மழை வேண்டினோம். பஞ்சம் நீங்கப் பிராத்தித்தோம். எங்கள் பிரார்த்தனை கைகூட வில்லையே!" என்று கவலையுடன் கேட்டார்கள் "மூஸாவே, உங்கள் மத்தியில் கோள் சொல்பவர் ஒருவர் இருக்கிறார். அதனால் தான் உங்கள் பிரார்த்தினை ஒப்புக் கொள்ளப் படவில்லை." என்று அல்லாஹ் அறிவித்தான் " அவர் யார்? " என்று மூஸா நபி கேட்டார்கள்.

" நான், கோள் சொல்ல வேண்டாம் என்று தடுக்கிறேன். நீர் என்னை கோள் சொல்லச் சொல்கிறீரா?" என்று அல்லாஹ் கேட்டான். உடனே நபி மூஸா (அலை) அவர்கள் அனைவரையும் அழைத்து எல்லோரும் சேர்ந்து பாவ மன்னிப்பு கோருமாறு பணித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்தனர். மழை பொழிந்தது, பஞ்சம் நீங்கியது.

கப்றில் வேதனை

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், நண்பர்கள் சிலரும் ஒரு வழியே போய்க் கொண்டிருந்தார்கள். செல்லும் வழியில் ஒரு மையவாடி தென்பட்டது. அங்கிருந்த இரண்டு கப்றுகளை அண்மித்ததும் நபியவர்கள் சத்தமிட்டு " தஸ்பீஹ் " செய்தார்கள் " ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? " என்று ஸஹாபாக்கள் கேட்டனர். " இந்த இரு கப்றுகளிலும் அடக்கம் செய்யப்பட்டுள்ள இருவருக்கும் கப்றுக்குள்ளே வேதனை செய்யப்படுகிறது. அதைக் கண்டுதான் சத்தமிட்டு தஸ்பீஹ் செய்தேன் " என்று நபிமணி அவர்கள் கூறினார்கள். " ஏன்? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? " என்று நண்பர்கள் வினவினர் " அவர்கள் செய்த பாவங்கள் உங்கள் எண்ணத்தில் மிகச் சாதாரணமானவை. ஆனால் அல்லாஹ்விடத்தில் அவை மிகப் பாரதூரமானவை. ஒருவர் செய்த பாவம் கோள் சொல்லுதல். மற்றவர் செய்தது சிறு நீர் கழித்து ஒழுங்காகத் துப்பரவு செய்யாமை "

என்று கூறி, பசுமையான ஓர் ஈத்த மட்டையை கொண்டு வரச் சொல்லி அதை இரண்டாகப் பிளந்து அவற்றை இரண்டு கப்றுகளிலும் நட்டினார்கள். " இந்த ஈத்த மட்டைகள் பசுமையாக இருக்கும் காலமெல்லாம் இவர்களுக்கு வேதனை குறைக்கப்படும் " என்று தமது செயலுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கம் கூறினார்கள்.

noolaham.org | aavanaham.org

உயிரினங்கள் மீது அன்பு

ஒரு நாள் ஒருவர் வீதி வழியே போய்க் கொண்டிருந்தார். அவருக்குத் தாகம் அதிகரித்தது. வழியில் ஒரு கிணறு தென்பட்டது. அதிலிருந்து தண்ணீரைப் பெற்று அதைப்பருகி தாகத்தை தீர்த்துக் கொண்டார். தொடர்ந்து நடந்து போய்க் கொண்டிந்தார். எதிரில் ஒரு நாயைக் கண்டார். அது தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தது. அதனால் தனது வாயை மண்ணில் தேய்த்துக் கொண்டிருந்தது. இது கண்டு அதன் மீது அவர் இரங்கினார். சற்று முன்னர் தாகத்தால் சிரமப்பட்டதை எண்ணிப்பார்த்தார். தனது காலுறையை நீரில் நனைத்து அதை அந்த நாயின் வாயினுள் பிழிந்து விட்டார். அது அந்நீரைப் பருகி தாகத்தை தீர்த்துக் கொண்டது.

" அந்த மனிதரின் சிறந்த செயலை அல்லாஹ் பெரிதும் விரும்பினான். அவரது பாவங்களை மன்னித்துக் கொண்டான். " என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."சாதாரன பிராணிகளுக்கு இரக்கம் காட்டுவதும் இவ்வளவு உத்தமமானதா? " என்று தோழர்கள் கேட்டனர் " ஆம்! உயிரினங்கள் எவையாக இருப்பினும் அவற்றின் மீது அன்பு காட்டுவது மிகவும் உத்தமமான பண்பாகும் " என்று நபி மணி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கம்

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களிடத்தில் ஒரு நாள் ஒரு விருந்தினர் வந்தார் கலீபா அவர்கள் அப்போது எழுதிக்கொண்டிருந்தார்கள். அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கு அணையப்போனது. அங்கிருந்த விருந்தினர் அவ் விளக்கைச் சரிசெய்து மீண்டும் அது எரிவதற்கு ஏற்பாடு செய்ய முற்பட்டார். கலீபா அவர்கள் அதற்கு அவரை அனுமதிக்கவில்லை. விருந்தாளியாக வந்திருப்பவரிடம் வேலை வாங்குவது முறையல்ல என்று கலீபா அவர்கள் கூறி, அவர்களே சென்று விளக்கினுள் எண்ணெய் ஊற்றி அதை எரிய வைத்தார்கள்.

" கலீபா அவர்களே, உங்கள் பணியாளை அழைத்து அவரை அவ் வேலையைச் சொல்லலாமே " என்று அவ்விருந்தினர் கேட்டார். " இல்லை. அவர் தூங்கிக்கொண்டு இருக்கிறார். அவரை எழுப்புவது சரியல்ல " என்று கலீபா கூறினார்கள். " கலீபா அவர்களே, நீங்கள் இந்த வேலையைச் செய்து சிரமப்படுகிறீர்களே " என்று அவர் கேட்டார்." ஒரு சிரமமும் இல்லை நான் கலீபா என்பதற்காக இதைச் செய்வதில் என்ன அகௌரவம் இருக்கிறது. இதைச் செய்யும் போது உமறாகப் போய் அதைச் செய்து விட்டு உமறாகவே வருகிறேன் " என்று கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்.

noolaham.org | aavanaham.org

நபியின் உபதேசம்

நபி மணி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்திருந்தார்கள். அவர்களது வருகையை அறிந்த மக்காவாசிகள் நபியவர்களைப் பார்ப்பதற்குப் போனார்கள். அவர்களில் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (றழி) அவர்களும் ஒருவர். அவர்கள் நபியவர்களை மிகவும் கூர்ந்து கவனித்தார்கள். அவ்வாறு பார்த்துவிட்டு " நபியவர்களைக் கூர்ந்து கவனித்தேன். அவர்களது பேச்சையும் கேட்டேன். அவர்களது முகம் மிகவும் பிரகாசமாக இருந்தது. அவர்களது முகத்தைப் பார்த்ததுமே அவர்கள் மிகவும் உண்மையாளர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அவர்களை நான் சந்தித்த போது எனது காதில் விழுந்த அவர்களது முதற்பேச்சு இவ்வாறு அமைந்திருந்தது. " மனிதர்களே, உங்கள் மத்தியல் " ஸலாம் " என்னும் சாந்தி வாழ்த்தைப் பரிமாறிக் கொள்ளுங்கள், பசித்தவர்களுக்கு உணவளியுங்கள், இரவில் மனிதர்களெல்லாம் தூங்கிக்கிடக்கும் வேளையில் நீங்கள் எழுந்து தொழுங்கள். இவ்வாறு நீங்கள் செய்தால், நிம்மதியாக நீங்கள் சுவனம் நுழைவீர்கள் " இவ்வாறு அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (றழி) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியின் வாழ்வு

ஒரு நாள், நபித்தோழர்களில் மூவர், நபிமணி (ஸல்) அவர்களின் மனைவியரில் ஒருவரிடம் வந்து, " நபியவர்களின் வணக்க வழிபாடுகள் எவ்வாறிருக்கின்றன? " என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மிகவும் அதிகமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதாக அவர்களுக்குக் கூறப்பட்டது. " அல்லாஹ்வின் தூதரும், நேசரும், நபிமார்களின் தலைவருமான அவர்கள் இவ்வளவு அதிகமான வணக்கங்களில் ஈடுபடுகின்றார்களே! நாங்கள் அவ்வாறு வணங்கவில்லையே என்று கவலை தெரிவித்து, அவர்களில் ஒருவர், " நான் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்து வணங்கப் போகிறேன் " என்றார். மற்றவர், " நான் காலமெல்லாம் நோன்பு நோற்கப் போகிறேன் " என்றார்.

மூன்றாமவர், "நான் திருமணமே செய்யாது வணக்கத்தில் மூழ்கப்போகிறேன்" என்றார்.இவர்களது கருத்துக்களைக் கவனத்திற் கொண்ட நபியவர்கள், " நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம்! நான் உங்களை விட அதிகமாக அல்லாஹ்வைப் பயப்படுகிறேன். நான் இரவில் தொழுகிறேன். அத்துடன் தூங்கவும் செய்கிறேன். நோன்பு நோற்கிறேன். சில சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காமலும் இருக்கிறேன். திருமணம் செய்து குடும்பமும் நடத்துகிறேன். இதுதான் இஸ்லாமிய வாழ்க்கை. இவ்வாறுதான் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்" என்று தமது தோழர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

பொறுமை

முற்காலத்தில் வாழ்ந்த ஒருவரின் குழந்தை தடீரென்று மரணித்து விட்டது. அம்மனிதர், அது குறித்து மிகவும் கவலைப்பட்டார். தொடர்ந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்.

இதைக் கேள்வியுற்ற அவரது நண்பர் ஒருவர் அம்மனிதருக்கு ஆறுதல் கூற வந்தார். " நண்பரே, நீரும் உமது மகனும் சிறையில் அடைக்கப்பட்டு விட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீர் மட்டும் சிறையில் தொடர்ந்து இருக்க உமது மகன் விடுதலை செய்யப்பட்டால் நீர் கவலைப்படுவீரா? மகிழ்ச்சியடைவீரா? " என்று நண்பர் கேட்டார்.

நான் சிறையில் இருந்தாலும் எனது மகன் முதலில் விடுதலை செய்யப்பட்டமைக்காக நான் மகிழ்ச்சியைடைகிறேன். " என்றார் அம்மனிதர்.

" ஆம்! உலகம் ஒரு சிறைக் கூடம். நீரும் மகனும் அதில் இருந்தீர்கள். உமது மகன் உலகமெனும் சிறையிலிருந்து முதலில் விடுவிக்கப்பட்டு விட்டார். அதற்காக நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? " என்று நண்பர் கேட்டார். இது கேட்டு அம்மனிதர் மகிழ்ச்சியடைந்தார். தனது கவலையை விட்டுவிட்டார்.

noolaham.org | aavanaham.org

பிறருக்கு உதவுதல்

ஹஸ்றத் உமர் (றழி) அவர்களது மகன் ஒரு நாள் ஜுஹ்பா என்ற இடத்தில் தங்கியிருந்தார். அவருக்குக் கடும் நோய் பீடித்திருந்தது. நோயினால் வாடிப்போயிருந்த அவர் சிறிது உணவு உட்கொள்வதற்காக மீன் வாங்கி வருமாறு தனது பணியாளை ஏவினார். அவர் சென்று ஒரு மீன் வாங்கி வந்தார். நோயினால் வாடிப்போய் இருந்த அவருக்குக் கொடுப்பதற்காக அதைச் சமைக்க மனைவி ஆயத்தப்பட்டபோது அங்கே வந்த ஒரு யாசகர் அந்த மீனைக் கேட்டார். உமர் (றழி) அவர்களது மகன் அந்த மீனை அவருக்குக் கொடுத்து விடுமாறு பணித்தர்கள். " நீங்கள் நோயுற்றிருந்தீர்கள். மீன் சாப்பிட ஆசைப்பட்டீர்கள். உங்களுக்காகத் தேடிக் கொண்டு வரப்பட்டது இந்த மீன். இதை அந்த ஏழை மனிதருக்குக் கொடுக்கச் சொல்கின்றீர்களே!

வேறு ஏதாவது கொடுக்கலாமே " என்று மனைவி கேட்டார். " இல்லை, அவர் அந்த மீனையே விரும்பிக் கேட்கிறார். அதை அவருக்கே கொடுத்து விடுங்கள். எனக்கு வேண்டாம்! " என்று இப்னு உமர் (றழி) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அயலாரைப் பேணுதல்

நபி மணி (ஸல்) அவர்கள் ஒரு முறை புனித யுத்தத்துக்குப் புறப்பட்டார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். தமது அணியில் இணைந்து கொள்ளும் வீரர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது தமது அணியினரை விழித்து, " இன்று யாராவது தனது அயலாருக்கு ஏதாவது துன்பம் செய்திருந்தால் அவர் எனது அணியில் சேர வேண்டாம் " எனறு கட்டளையிட்டார்கள்.

அப்போது ஒரு மனிதர் எழுந்து " நபியவர்களே, நான் இன்று எனது அடுத்த வீட்டுக்காரரின் வீட்டு வேலியோரமாகக் குந்தியிருந்து சிறு நீர் கழித்து விட்டேன். நான் உங்களுடன் வரக்கூடாதா? " என்று கேட்டார். " ஆம்! நீரும் வரக்கூடாது. அடுத்த வீட்டாரின் கண்ணியத்தைப் பேணத் தவறிய நீரும் வரவேண்டாம்! " என்று கண்டிப்பாகக் கூறினார்கள் நபி மணி (ஸல்) அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்றின் அவலம்

நபி ஈஸா (அலை) அவர்களிடத்தில் ஒரு நாள் சிலர் வந்தார்கள். அவர்கள் முஸ்லிமல்லாதவர்களாயிருந்தனர். ஈஸா (அலை) அவர்களை நோக்கி, " நீங்கள் மரணித்தவர்களை அல்லாஹ்வின் உத்தரவுப்படி எழுப்புவதாகக் கேள்விப்பட்டோம். அண்மைக் காலத்தில் மரணித்தவர்களை நீங்கள் எழுப்பியிருப்பீர்கள். மிகவும் நீண்ட காலத்திற்கு முன்னர் மரணித்த ஒருவரை நீங்கள் உயிர் பெற்று எழச் செய்யவேண்டும்? " என்று கூறினார்கள். " அப்படியா? நீங்கள் யாரை எழுப்பிக்காட்ட வேண்டும். என்று விரும்புகிறீர்கள்? " என்று ஈஸா (அலை) அவர்கள் கேட்டார்கள். " மிகவும் நீண்ட காலத்திற்கு முன்னர் மரணித்த நூஹ் நபியின் மகன் ஸாம் என்பவரை நீங்கள் எழுப்பிக் காட்டவேண்டும்? " என்று அவர்கள் கோரினார்கள். உடனே ஈஸா (அலை) அவர்கள், ஸாம் என்பவரது அடக்கத்தலத்துக்கு வந்து இரண்டு றக்அத் தொழுது அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். அல்லாஹ்வின் உத்தரவுப்படி அதில் அடக்கப்பட்டிருந்த ஸாம் என்பவர் கப்ரில் இருந்து உயிர் பெற்று எழுந்தார். அவரது தலை, தாடி முடிகள் நரைத்து இருந்தன. " என்ன இது? நீங்கள் மரணிக்கும் போது இவ்வாறு நரை இருந்திருக்கவில்லை என்று அறிகின்றோம்.

noolaham.org | aavanaham.org

இப்போது தலை, தாடி ஆகியவற்றின் முடிகள் நரைத்து விட்டனவே " என்று அவர்களிடம் வினவப்பட்டது " " கப்ரில் இருக்கும் போது உலக முடிவுக்கான அழைப்பு போன்று பாரிய சத்தம் கேட்டது. அந்த அதிர்ச்சியில் எனது முடிகள் நரைத்துவிட்டன " என்று அவர் பதிலளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலாருக்கு உதவுதல்

நபி மணி (ஸல்) அவர்கள் முக்கிய பணி ஒன்றிற்காகத் தமது வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டார்கள். அப்போது நபியவர்களைச் சந்திக்க ஒருவர் வந்தார். அவர் நபியவர்களுடன் நீண்ட நேரமாக நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார். நபியவர்களும் நின்றவாறே நீண்ட நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு தோழர் அவதானித்தார். அந்த மனிதர் நபியவர்களை நீண்ட நேரம் நிற்கச் செய்து அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறாரே என்று நினைத்து, அம்மனிதர் தனது பேச்சை முடித்துக் கொண்டு சென்றதும் " நபியவர்களே, இவர் யார்? உங்களை நீண்ட நேரம் நிற்கவைத்துப் பேசிக்கொண்டிருந்தாரே? " என்று கேட்டார்.

" அவர் யார் தெரியுமா? அவர்தான் ஜிப்ரீல் (அலை). அடுத்த வீட்டாருடன் அன்புடன் நடப்பது பற்றியும், அவர்களுக்கு உதவி உபகாரம் புரிவதன் முக்கியத்துவம் குறித்தும் எனக்கு அறிவுறுத்திக் கொண்டிருந்தார்.

எனது சொத்துக்களில் அடுத்த வீட்டாருக்கும் வாரிசு உரிமை கிடைக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டு விடுவானோ என்று நான் எண்ணும் அளவுக்கு அடுத்த வீட்டாரைப் பேணுவதன் அவசியம் பற்றி அவர் வலியுறுத்திக் கொண்டிருந்தார்.அவருக்கு நீங்கள் ஸலாம் கூறியிருந்தால் அவர் உங்களுக்குப் பதில் பகர்ந்திருப்பார் " என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை

மதீனாவில் அவ்ஸ், கஸ்ரஜ் என்ற இரு பிரிவினர் வாழ்ந்தார்கள். நீண்ட காலம் அவர்கள் மத்தியிலே பிளவு நிலவியது. பல தடவை அவர்கள் மோதிக் கொண்டார்கள். நபி மணி (ஸல்) அவர்கள் அவர்களை ஒற்றுமைப்படுத்தி சமரசம் செய்து வைத்தார்கள். அதன் பின் அவ்விரு சாராரும் இறுக்கமாக உறவு கொண்டு நெருக்கமாக வாழ்ந்தார்கள். நீண்ட காலம் பிளவு பட்டிருந்த இரு பிரிவினரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருவது கண்ட ஒரு யூதன் பொறாமைப்பட்டான். அவர்களிடையே மீண்டும் பிரிவை ஏற்படுத்த விரும்பினான். ஒருமனிதனை அவர்களிடம் அனுப்பி அவ்விரு சாராரும் பிளவுற்றிருந்த வேளையில் மோதிக் கொண்ட சம்பவங்களை நினைவு படுத்தி பாடல்கள் மூலம் மீட்டிக் காட்ட முயற்சி செய்தான். அதன் காரணமாக அவ் விரு பிரிவினரும் தத்தமது பழைய கசப்புகளை நினைத்து மீண்டும் கவலைப்பட்டனர்.

நேருக்கு நேர் மோத வாள்களைத் தூக்கினர். பெரும் கலவரம் மூளும் அபாயம் தோன்றியது. அதைக் கேள்வியுற்ற நபி மணி (ஸல்) அவர்கள் அவசர அவசரமாக அங்கு வந்தார்கள். "நான் உங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அறியாமைக் காலத்து பழக்கத்தையும் தர்க்கத்தையும் மேற்கொள்கின்றீர்களா? இந்தக் கெட்ட செயல்களைத் தூக்கி வீசி, ஒற்றுமையாக வாழுங்கள்" என்று கண்டிப்பாக கூறினார்கள். அப்போது தமது செயல் குறித்து அவர்கள் மிகவும் வருந்தினர். மீண்டும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாசை

****

த.்லபா பின் காதிப் என்பவர் ஒரு நாள் நபிமணி (ஸல்) அவர்களிடம் வந்தார். "நபியவர்களே, எனக்குப் பொருளாதாரம் பெருகுவதற்குப் பிரார்த்தியுங்கள்" என்று வேண்டினார். "த.்லபா, அப்படிக் கேட்காதீர்கள் குறைந்த பொருளாதாரம் இருந்து அதற்கு நன்றி செலுத்தி வாழ்வதே மேல். அதிக பொருளாதாரம் உங்களை சங்கடத்தில் ஆழ்த்திவிடும்." என்று நபி மணி (ஸல்) அவர்கள் அறிவுரை நல்கினார்கள். அவர் திருப்திப்படவில்லை. அதிக பொருள் வேண்டுமென்றே விரும்பினார். செல்வம் பெருகப் பிரார்த்திக்கக் கோரினார். நபியவர்கள் அவ்வாறு பிரார்த்தித்தார்கள். அவருக்குச் செல்வம் பெருகியது. ஆடுகள் ஆயிரக் கணக்கில் பெருகின. மதீனாவில் மிகப் பெரிய செல்வந்தராக விளங்கினார்.

தனது செல்வத்தைப் பராமரிப்பதில் அதிக கவனஞ்செலுத்தினார். ஐந்து நேரத் தொழுகைக்குக் கூட நேரம் ஒதுக்கிக் கொள்ள அவரால் முடியவில்லை. ளுஹர், அஸர் தொழுகைகளை மட்டும் ஜமாஅத்தாக நிறைவேற்றினார். மற்ற நேரத் தொழுகைகளை விட்டுவிட்டார். காலப் போக்கில் ஜும்ஆத் தொழுகையை மட்டுமே நிறைவேற்றினார். ஐந்து நேரத் தொழுகையையும் விட்டுவிட்டார். மேலும் பொருள் பெருகியது. அதனைக் கண்காணிப்பதில் முழுமூச்காக ஈடுபட்டார். ஜும்ஆத் தொழுகையையும் விட்டுவிட்டார். அவர் மார்க்க நெறிமுறைகளை விட்டும், கடமைகளை விட்டும் தூரச் சென்றுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினரைப் பேணுதல்

அறபாத் தினத்தன்று காலை வேளையில் நபிமணி (ஸல்) அவர்கள் மதீனாப் பள்ளிவாயலில் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நபியவர்கள், தமது நண்பர்களை நோக்கி " இங்கு யாராவது, தனது உறவினர்களுடன் பிணங்கிக் கொண்டவர் இருந்தால் அவர் இங்கிருந்து எழுந்து சென்று விடட்டும். அவர் இந்தச் சபையில் இருக்க வேண்டாம் " எனப் பணித்தார்கள்.

உடனே அங்கிருந்த ஒருவர் எழுந்து வெளியே சென்றார். சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தார். அவரை நபியவர்கள் நோக்கி, " ஏன் எழுந்து சென்றீர்? " என்று கேட்டார்கள்.

"எனது சாச்சி முறையான ஒருவருடன் நான் கோபங்கொண்டிருந்தேன். அவரும் என்னுடன் கோபித்திருந்தார். உறவினருடன் பிணங்கிக் கொண்டால் இச் சபையில் இருக்க வேண்டாம் என்று நீங்கள் சொன்னதும் உடனே சென்று எனது சிறிய தாயைச் சந்தித்து அவரிடம் மன்னிப்புக் கோரி அவரது திருப்தியைப் பெற்று வந்துள்ளேன்" என்று அவர் பதிலளித்தார்.

"நல்ல காரியம் செய்தீர். இப்போது நீர் இங்கு இருக்கலாம். உறவினர்களைத் துண்டித்து அவர்களுடன் பிணங்கிக் கொண்டவர் இருக்கும் சபையில் அல்லாஹ்வின "றஹ்மத்" என்னும் அருள் இறங்கமாட்டாது" என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

noolaham.org | aavanaham.org

பிறர் குறை பேசுதல்

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்தார்கள். அவ்வேளை திண்ணைத் தோழர்களான ஸஹாபாக்கள் பள்ளிவாயலில் அமர்ந்திருந்து நபி மணி (ஸல்) அவர்கள் கூறிய மணி மொழிகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே ஸைத் இப்னு தாபித் (றழி) அவர்கள் வந்தார்கள். அங்கிருந்த தோழர்கள் அவரை நோக்கி, " சில நாட்களாக நாங்கள் இறைச்சி உண்ணவில்லை. நபியவர்களிடம் சென்று கொஞ்சம் இறைச்சி வாங்கி வாருங்கள் " என்று கூறினார்கள். உடனே ஸைத் இப்னு தாபித் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள்.

அவர் அங்கிருந்து சென்ற பின்னர் திண்ணைத் தோழர்கள் ஸைத் இப்னு தாபித் அவர்களைப் பற்றி குறையாகப் பேசினார்கள். ஸைத் அவர்கள் நபியிடத்தில் சென்று திண்ணைத் தோழர்களுக்கு இறைச்சி தருமாறு கேட்ட போது "அவர்கள் சற்று நேரத்துக்கு முன்னர் இறைச்சி சாப்பிட்டுள்ளார்களே" என்று கேட்டார்கள். ஸைத் அவர்கள் தோழர்களிடம் சென்று "சற்று நேரத்தின் முன்னர் நீங்கள் இறைச்சி உண்டதாக நபியவர்கள் கூறுகிறார்கள்" என்று சொன்னார்கள். "இல்லையே!" என்று தோழர்கள் மறுத்தார்கள். இது பற்றி நபியவர்களிடம் சொன்னபோது, "அவர்கள் சற்று நேரத்திற்கு முன்னர் உங்களைப் பற்றி குறையாகப் பேசினர். ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றி குறைகூறுவது அவரது இறைச்சியைச் சாப்பிடுவது போன்றாகும்" என்று நபிமணி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாயை நேசித்தல்

நபிமணி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு வாலிபர் இருந்தார். அவரது பெயர் அல்கமா. அவருக்கு கடுமையான நோய் ஏற்பட்டு மரணப்படுக்கையில் இருந்தார். அவர் உயிர் பிரியும் தருணத்தில் இருக்கும் செய்தியை அவரது மனைவி அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார். நபியவர்கள் பிலால் (றழி), ஸல்மான் (றழி), அம்மார் (றழி) ஆகிய மூவரையும் அவரைப் பார்த்து வருமாறு அனுப்பினார்கள். அம்மூவரும் அங்கு வந்தனர். அவரது உயிர் பிரியும் வேளையில் இருப்பதைக் கண்டு அவருக்குக் கலிமாச் சொல்லிக் கொடுத்தனர். அவரால் அதைக் கூறமுடியவில்லை. உடனே அம்மூவரும் நபியவர்களிடம் வந்து அச்செய்தியைக் கூறினர். நபியவர்கள் " அவரது தாய், தந்தையர் இருவரும் உயிருடன் இருக்கின்றனரா? " என்று கேட்டார்கள். தந்தை காலமாகிவிட்டார்.

வயது முதிர்ந்த தாய் மட்டும் இருக்கின்றார் " என்று நபியவர்களக்கு கூறப்பட்டது. தாயைத் தன்னிடம் வருமாறு அழைத்தார்கள். அவரது மகன் அல்கமாவின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன என்று தாயிடம் கேட்டார்கள்.

Copyright © Shiva Nandini Foundation
Vedanam.org | aavanamam.org

" அவர் நன்றாகத் தொழுதார், நோன்பு நோற்றார், தான தருமங்கள் அதிகமாகப் புரிந்தார் " என்று தாய் கூறினார். " உமக்கும் அவருக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருந்தது? " என்று கேட்டார்கள். " அவர் மீது எனக்குக் கோபம். அவர் என்னைக் கவனிப்பதில்லை. அவரது மனைவியையே நன்கு கவனிக்கிறார். " என்றார் தாயார். உடனே நபியவர்கள் பிலால் (றழி) அவர்களிடம் " விறகுகளைக் குவித்து நெருப்பு மூட்டி அதில்போட்டு அல்கமாவை எரித்து விடுங்கள்" என்று பணித்தார்கள். அதைக் கேட்டு தாயார் அதிர்ச்சி அடைந்தார். எனது முன்னிலையில் எனது மகன் எரிக்கப்படுவதை நான் சகிக்க மாட்டேன்" என்றார். "உமது திருப்தியை அவன் பெறவில்லையானால் மறுமையில் நரக நெருப்பில் எரிக்கப்படுவாரே" என்று நபியவர்கள் கேட்டார்கள். "நபியவர்களே, நான் அவரை மன்னித்து விட்டேன்" என்று தாயார் கூறினார். அப்போது அவருக்குக் கலிமாச் சொல்லிக் கொடுக்குமாறு நபியவர்கள் பணித்தார்கள். அவ்வாறு சொல்லிக் கொடுக்கப்பட்டது. திருப்தியாகக் கலிமாவை மொழிந்தார். அவரது உயிர் பிரிந்தது.

noolaham.org | aavanaham.org

மக்கள் பணி

ஸல்மானுல் பாரிஸீ (றழி) அவர்கள் மதாயின் நகரத்தின் தலைவராகப் பதவி வகித்தார்கள். ஒரு நாள் அவர்கள் வீதியிலே சென்று கொண்டிருந்தார்கள். கடைத் தெருவில் ஒரு மனிதர் சில பொருட்களை வாங்கி ஒரு பையில் போட்டுக்கொண்டார். அப்பை பாரமாக இருந்தது. அவரால் அதைத் தூக்க முடியவில்லை. அங்கு வந்து கொண்டிருந்த ஸல்மானுல் பாரிஸீ (றழி) அவர்களை அம்மனிதர் கண்டார். அவர்கள் அந்நகரத்தின் தலைவர் என்பது அம்மனிதருக்குத் தெரியாது. அவர் ஒரு கூலியாள் என்று அவர்களை நினைத்துக் கொண்டார். அந்தப் பையைச் சுமந்து வந்து தனது வீட்டுக்குத் தருமாறு அம்மனிதர் பணித்தார். ஸல்மான் பாரிஸீ அவர்கள் தன்னை அவ்வூரின் தலைவர் என்று காட்டிக் கொள்ளாமல் அப்பையைச் சுமந்து வந்தார்கள். வழியில் அதைக் கண்டவர்கள், ஊர்த் தலைவர் அல்லவா சுமையைத் தூக்கிக்கொண்டு வருகின்றார்கள் என்று சொல்லிக் கொண்டு, தாம் அதைச் சுமந்து வருவதாகக் கூறினார்கள். ஸல்மான் பாரிஸீ அவர்கள் அதற்கு இணங்கவில்லை. அப்போதுான், தமது பொருட்களைச் சுமந்து வருபவர் அந்த நகரின் பெருந்தலைவர் என்பது அம்மனிதருக்குத் தெரிந்தது. அவர் மன்னிப்புக் கோரினார்.

noolaham.org | aavanaham.org

அப்பையைத் தாம் சுமந்து வரப்போவதாகத் தெரிவித்தார். ஸல்மானுல் பாரிஸீ அவர்கள் அதற்கு இணங்கவில்லை. அவர்களே தொடர்ந்து சுமந்து வந்து அம்மனிதரின் வீட்டில் அதை ஒப்படைத்து விட்டுச் சென்றார்கள்.

noolaham.org | aavanaham.org

ஏமாற்று வியாபாரம்

ஒரு நாள் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களிடத்தில் சிலர் வந்தார்கள். வந்த அவர்கள் பின்வரும் சம்பவத்தைச் சொன்னார்கள். " நாங்கள் ஹஜ் கடமைக்காகப் புறப்பட்டு வந்தோம். எங்களுடன் ஒரு நண்பரும் வந்தார். நாங்கள் தாதுஸ் ஸபாஹ் என்ற இடத்தை அண்மித்தபோது, அந்த நண்பர் தீடீரென்று மரணித்துவிட்டார். இவரை அடக்கம் செய்வதற்காக ஓரிடத்தில் குழியைத் தோண்டினோம். அதற்குள் ஒரு பாம்பு இருந்தது. பயத்தினால் அதை விட்டுவிட்டு வேறு இடத்தில் கப்று தோண்டினோம். அதற்குள்ளும் ஒரு பாம்பு தென்பட்டது. அதையும் விட்டுவிட்டு இன்னுமொரு குழியைத் தோண்டினோம். அங்கும் பாம்புதான் இருந்தது. அதனால் அவரை அடக்கம் செய்யாமல் வந்துள்ளோம். என்ன செய்யலாம்? " என்று அவர்கள் கேட்டார்கள்.

" அவர் ஏதாவது பாவம் செய்திருப்பார். அதனால் நீங்கள் எங்கு கப்றுக் குழி தோண்டினாலும் இதே காட்சிதான் தென்படும். ஓரிடத்தில் குழியைத் தோண்டிப் பாருங்கள் அங்கும் பாம்பு தென்பட்டால் அதற்குள் அவரை அடக்கம் செய்துவிடுங்கள் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறினார்கள். அவ்வாறு பாம்புடனேயே அவரது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டது.

"அவர் என்ன குற்றம் செய்தார்?" என்று அவரது மனைவியிடம் விசாரித்தனர். "அவர் கூடாத பொருட்களை நல்ல பொருட்கள் என்று கூறி ஏமாற்றி வியாபாரம் செய்தார்" என்று அவரது மனைவி கூறினார்.

noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் பேரருள்

ஆலிம் ஒருவரிடம் ஏழை மனிதர் ஒருவர் வந்து, தனது வறுமையைப் பற்றி முறையிட்டார். எத்துணை வணக்கவாளியாக தான் இருந்தும் இறைவன் தனக்குச் செல்வத்தைத் தரவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்.

அப்போது மார்க்க அறிஞர் கேட்டார்: "பத்தாயிரம் வெள்ளிக்காசுகள் உமக்குக் கிடைத்தால் உம்முடைய இரண்டு கண்களும் குருடாகிப் போவதை நீர் விரும்புவீரா? " என்று.

"இல்லை" என்றார் அந்த ஏழை. அதுபோல் இருமடங்கு பணத்தைத் தந்தால், அதற்குப் பகரமாக உம்முடைய இரண்டு கால்களையும், இரண்டு கைகளையும் இழக்கச் சம்மதிப்பீரா? " என்று அந்த அறிஞர் கேட்டார்.

"ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்" என்றார் அந்த மனிதர். "முப்பதாயிரம் வெள்ளிக் காசுகள் உனக்குக் கிடைத்தால், உம்முடைய மூளையை இழக்கத் தயாராவீரா? " என்று கேட்டார் அறிஞர்.

"மாட்டேன், மாட்டேன்" என்றார் ஏழை மனிதர். "இப்பொழுது நான் குறிப்பிட்ட அறுபதாயிரம் பணத்துக்காக, நீர் கண்களை, கரங்களை, கால்களை, மூளையை இழக்கத் தயாராக இல்லை. அதாவது இந்தப் பணத்துக்கு மேலாக, இறைவன் தந்துள்ள பாக்கியங்களை நீர் சிறப்பாகக் கருதுகிறீர். அப்படியிருக்கும்போது, உமக்கு இத்துணை பாக்கியங்களைத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக, அவனைக் குறைகூறுகின்றீரே!" என்று உணர்த்தினார் அந்த அறிஞர்.

noolaham.org | aavanaham.org

புனித நபியின் புன்முறுவல்

முஹம்மத் என்பவர் புதிய ஒரு மார்க்கததை போதிக்கிறார். அவர் தமது தெய்வங்களை கண்டிக்கின்றார். என்று ஒரு மனிதர் கேள்வியுற்றார். அவருக்குக் கடுங்போபம் ஏற்பட்டது. கையில் வாளொன்றை ஏந்திக்கொண்டு முஹம்மதைக் கொன்றே தீருவேன் என்று சப்தமிட்டு ஓடிவருகின்றார்.

அவர் எதிரே முஹம்மத் (ஸல்) அவர்கள் வருகிறார்கள். அவர் ஆவேசத்துடன் சப்தமிடுவதை அமைதியாகக் கேட்டுக்கொண்டு நிற்கிறார்கள். அம்மனிதர் நபியவர்களை நெருங்கிறார். அவரைப் பார்த்து நபியவர்கள் புன்முறுவல் செய்கின்றார்கள். இதைக்கண்டதுதான் தாமதம் அம்மனிதர் அமைதியடைந்துவிடுகிறார். நபியவர்களின் சாந்தி தவழும் முகமும்,புன்முறுவலும் அவரை அமைதிப் படுத்தி விட்டன.

"முஹம்மதே, சற்று நேரத்துக்கு முன்னர் இவ் வுலகில் நீங்கள் தான் எனக்கு மிகவும் வெறுப்பானவராயிருந்தீர்கள். இன்று நீங்கள் தான் எனக்கு மிகவும் விருப்பமானவராக இருக்கின்றீர்கள். உங்கள் முகமே எனக்கு கவர்ச்சியானதாகத் தெரிகிறது" என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொண்டு சென்றார்.

noolaham.org | aavanaham.org

தன்னடக்கம்

அபூ யஸீத் அல் ஹர்ராத் என்பவர் பிரசித்தி பெற்ற ஓர் இறைநேசச் செல்வர். மிகுந்த வணக்கவாளி. அவர் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அவரைப் பற்றியும் அவரது வணக்கத் திறன் பற்றியும் சனங்கள் புகழ்ந்து பேசத் தொடங்கினர். அவர் சாப்பிட்ட ஒரு பழத்தின் தோல் கீழே விழுந்து கிடந்தது. அதை எடுத்து ஒருவர் பெருந்தொகைப் பணத்துக்கு விற்றார். அந்த அளவுக்கு அவர் மீது மக்கள் மதிப்பு வைத்திருந்தனர். இது குறித்து அப் பெரியார் கவலைப்பட்டார். தனக்குப் பெருமை ஏற்பட்டு விடுமோ என்று பயந்தார். இரவோடிரவாக அக் கிராமத்தை விட்டு வெளியேறி வேறொரு கிராமத்துக்குச் சென்றார். அக் கிராமத்து சனங்கள் இவரைக் கண்டு "பைத்தியக்காரர்" என்று கேலி செய்தனர். கல்லால் எறிந்து பழித்துரைத்தனர். இது குறித்து அப் பெரியார் மகிழ்ச்சி அடைந்தார். இக் கிராமம்தான் தனக்குத் தகுதியான இடம் என்று கருதி அங்கேயே வசித்து வந்தார்.

noolaham.org | aavanaham.org

நபிமணியும் அபூஜஹ்லும்

நபிமணி (ஸல்) அவர்களின் பரம விரோதியான அபூஜஹ்ல் என்பவன் ஒரு நாள் தனது விக்கிரகங்களின் மீது ஆணையிட்டு "க.'.பாவைச் சுற்றியுள்ள புனித ஸ்தலத்தில் இந்த முஹம்மத் தொழுவதை இனி நான் கண்டால் என் கால்களால் அப்படியே அவரை மிதித்துவிடுவேன்" என்று கூறினான்.

ஒரு நாள் நபி மணி (ஸல்) அவர்கள் க.'.பாவைச் சுற்றியுள்ள ஹறம் ஷரீபில் தொழுவதைப் பார்த்த அவன் தனது சபதத்தை நிறைவேற்ற விரைந்து சென்றான். ஆனால் அதை நிறைவேற்றாமல் பின்னோக்கியே வேகமாக ஓடிவந்துவிட்டான். காரணம் என்னவென்று அங்கிருந்தவர்கள் அவனை வினவ, எனக்கும் முஹம்மதுக்கும் இடையில் பெரும் நெருப்புக் குண்டமொன்று தோன்றியது. அதனால்தான் ஓடிவந்துவிட்டேன். எனப் பதிலளித்தான்.

இவ்வார்த்தை நபி (ஸல்) அவர்களின் செவிகளுக்கு எட்டியது. அப்பொழுது அவர்கள், "அபூஜஹ்ல் என் அருகில் வந்திருந்தால், வானவர்கள் அவனது எலும்புகளை கணுக்கணுவாக முறித்திருப்பார்கள்" என்று கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் அற்புத சக்தி

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் பாபிலோனியாவிலிருந்து சிரியா நோக்கி வந்து கொண்டிருக்கும்போது கடற்கரை ஓரமாக ஒரு பிணத்தைக் கண்டார்கள். அது சின்னா பின்னமாகக் கிடந்தது. கடல் அலைகள் பெருகிவரும்போது அத்துடன் வருகின்ற மீன்கள் அதைத்தின்றன. அலைகள் கடலுக்குள் சென்றதும் அங்கு வருகின்ற மிருகங்கள் அதைப் புசித்தன. ஆகாயத்தில் பறந்து திரிகின்ற பறவைகளும் கொத்தி எடுத்துக் கொண்டுசென்றன. முடிவில் அப்பிணத்தின் எல்லா பாகங்களும் முடிந்துவிட்டன.

இதைக்கண்டு வியந்த நபி இப்றாஹீம் அலை அவர்கள், " மரித்தோரை எப்படி உயிர்ப்பிப்பாய்? என்பதை எனக்குக் காட்டு என்று அல்லாஹ்விடம் கேட்டார்கள். "நான்கு பறவைகளை அறுத்து அவற்றின் உடற்பாகங்களைச் சிறிய துண்டுகளாக்கி பின்னர் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து நான்கு மலைகளில் பங்கு பங்காக வைத்துவிட்டு அவற்றை ஒவ்வொன்றாகப் பெயர் சொல்லி அழையும்" என்று அல்லாஹ் அறிவித்தான். இப்றாஹீம் (அலை) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். நான்கு பறவைகளும் வெவ்வேறாக வந்தன.

அல்லாஹ்வின் அற்புத சக்தி கண்டு அதிசயித்து நின்றார்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூன் அச்சகம்

உங்களது சகல விதமான அச்சுத் தேவைகளுக்கும் இன்றே நாட வேண்டிய ஒரே இடம் நூன் அச்சகம்.

.இன்றைய நவீன கால ரசனைகளுக்கேற்ற வகையிலான விதத்தில் இந்தியாவில் இருந்தும் இலங்கை தலை நகரத்தில் இருந்தும் தருவிக்கப்பட்ட திருமண அழைப்பிதழ்கள்

.உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான பில் புத்தகங்கள்

.விசிட்டிங் காட்

.டெக் காட்

. துண்டுப் பிரசுரங்கள்

.நான்கு வர்ண (Four Colour) வேலைப்பாடுகள்

.லெமினேட்டிங்

.இறப்பர் முத்திரைகள்

.டிஜிட்டல் விளம்பரப் பலகை

.ஸ்கிரீன் பிரின்டிங்

.கிராபிக்ஸ்



இவை தவிர்ந்த ஏனைய அச்சகத் தேவைகளை எங்கும் பெறமுடியாத விலைக் கழிவுடனும், முதற்தரமாகவும், எண்ணங்களை வர்ணமயமாகவும், பெற்றுக் கொள்வதற்கு இன்றே நாடுங்கள்.

(மீராபாலிகா மகாவித்தியாலத்திக்கு அருகில் உள்ள வீதியில் 50 மீட்டர் தொலைவில்)

NOON PRESS
OFFSET PRINTING SERVICE
AMANULLAH ROAD,
KATTANKUDY-06.
HOT LINE : 065-2248159, 077-1677451
noonpress@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு மலர்

27.11.1990 அன்று காலமான
காத்தான்குடி 5ஆம் குறிச்சியைச்
சேர்ந்த அல்ஹாஜ்
O.E.M. முஸ்தபா
அவர்களது 20ஆவது வருட
நினைவாக அன்னாரின்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது.

SIDDEEK STORES
PADIYATALAWA.
27.11.2010

நூன் அச்சகம்
தொ.பே: 07716[illegible], 0652248159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org